[1992 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 410, திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

410—

ஆத்தூரில் தொழில் பயிற்சி நிலையம்.

* 4871—திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.ஆர்.டி.பி., ஐ.யு.டி.பி., மூலமாக கடன் வழங்கி தொழில் நடத்த ஒவ்வொரு தொகுதியிலும் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒரு தாலுகாவாக இருப்பதால் அங்கு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தற்போது திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. மற்றும் ஐ.யு.டி.பி., மூலம் கடன் பெற வசதி இருப்பினும் தொழிற் பயிற்சி பெற எங்கள் ஆத்தூர் பகுதியில் வசதி இல்லாததால் தொழில் துவங்க ஆர்வம் உள்ளவர்கள்கூட முன்வரத் தயங்குகிறார்கள். மேலும் ஆத்தூர் பகுதியில் 200-க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைகளும் மற்றும் விவசாயிகள் பயன்படுத்தும் டிராக்டர்களும், லாரிகளும் அதிக அளவில் உள்ளதால் அந்தப் பகுதியில் இது தொடர்பான தொழிற் பயிற்சி கல்வி பெற அவசியத் தேவையாக இருப்பதால் தனியார்களாவது துவங்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பிலே ஒரு தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்றால்,

1992 மார்ச் 31]

தொடரா இனச் செலவாக 55 இலட்சம் ரூபாயும் தொடரினச் செலவாக 5 இலட்சம் ரூபாயும் ஆக, 60 இலட்சம் ரூபாய் செலவாகும். அரசினுடைய நிதிநிலையைக் கருத்திலே கொண்டு, இப்போது அரசின் சார்பிலே தொழிற் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கிற கருத்துரு எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, தனியார் துறையிலே ஆரம்பிக்க வேண்டுமென்றால், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பரிசீலித்து முடிவினைப் பின்னர் அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 411. திரு. எம். சே. பாலன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

411—

தாடண்டர் நகர் அருகிலுள்ள குடிசை வாழ் மக்களுக்கு மாற்று இடம் ஒதுக்குதல்.

*4382—திரு. எம். கே. பாலன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதாப்பேட்டை கால்வாய் ஓரம் தாடண்டர் நகர் பக்கத்தில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றி, அவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆற்றோரங்களில் வாழும் குடிசைப்பகுதி மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்தும் திட்டத்திற்கு மான்யம் கோரி மைய அரசுக்கு பிரேரணை அனுப்பப் பட்டுள்ளது. இத்திட்டம் மைய அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் ஒப்புதல் கிடைக்கப்பெற்று நிறைவேற்றப்படும் தருவாயில், சைதாப்பேட்டை கால்வாய் தாடண்டர் நகர் ஓரம் அமைந்துள்ள குடிசைப் பகுதி மக்களை மாற்று இடங்களில் குடியமர்த்த நடவடிககை எடுக்கப்படும்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கால்வாய் ஓரமாக அமைந்து இருககின்ற குடிசைப் பகுதிகளில்